

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழகத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா பொதுக் கூட்டத்தில், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு நினைவுப் பரிசினை – விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களுக்கு வழங்கினார்.

## இந்திய கார்ப்பரேட் உலகின் மதிப்புமிகு தலைவர்களில் ஒருவராக

# டாடா குழுமத் தலைவர் சந்திரசேகர் விளங்குகிறார் - வாழ்த்து!

### டாடா குழுமத் தலைவருடனான சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.30-

**இராணிப்பேட்டை மாவட்டம். சிப்காட்டில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் புதிய உற்பத்தித் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழாவை முன்னிட்டு, டாடா குழுமத்தின் தலைவர் சந்திரசேகரன் அவர்களை சந்தித்துப் பேசியது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-**

இராணிப்பேட்டை மாவட்டம். சிப்காட்டில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் புதிய உற்பத்தித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டும் விழாவை முன்னிட்டு, டாடா குழுமத்தின் மரியாதைக்குரிய தலைவர் சந்திரசேகரன் அவர்களை இன்று விருந்தோம்பும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன்.

எளிமையான பின்புலத்தில் இருந்து உயர்ந்த அவர் இந்திய கார்ப்பரேட் உலகின் மதிப்புமிகு தலைவர்களில் ஒருவராக ஏற்றம் அடைந்து பலருக்கும் ஊக்கமாக விளங்கி வருகிறார். அவரது தலைமையின்கீழ்,குறிப்பிடத்தக்கவளர்ச்சியையும் பெருமாற்றத்தையும் டாடா குழுமம் அடைந்துள்ளது.

பயனுள்ள ஆலோசனைகளை நாங்கள் மேற்கொண்ட இச்சந்திப்பின்போது, டாடா குழுமம் தமிழ்நாட்டில் மேலும் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அன்போடு கோரிக்கை விடுத்தேன்.

திரு. சந்திரசேகரன் அவர்கள், கடந்த மூன்று ஆண்டுகளில், டாடா குழுமம் தமிழ்நாட்டில் தங்களது திட்டங்களைப் பெருமளவில் விரிவாக்கம் செய்ததைக் குறிப்பிட்டுப் பேசியதையும், நமதுதிராவிடமாடல்அரசின்வேகத்தையும்,எளிதில்



அணுகக் கூடிய தன்மையையும், விரைவான இயக்கத்தையும் அங்கீகரித்ததையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

நாங்கள் தொடர்ந்து இதேபோல டாடா குழும நிறுவனங்களின் தேவைகளுக்கு உடனடியாக, முழுமையாகச் செவி மடுப்பதோடு, எங்கள் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு எல்லா வழியிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்க இணைந்து பணிபுரிவோம் என அவருக்கு நான் உறுதியளிக்கிறேன். இன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் வெற்றி யடைய எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அவர் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்காக எனது நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தருமபுரி மேற்கு மாவட்டத்தில் - கழகத்தினர்

# வாக்காளர் பட்டியலில் சரிபார்த்தலில் தீவிரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் பி. பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப்.30-

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகளுக்கும், கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி முகவர்களுக்கும் (BLA 2), பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (BLC) வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர் மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வேண்டுகோள்!



அவரது அறிக்கை வருமாறு:-

இந்தியத் தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

தருமபுரி மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச்செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத் தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்த படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01ந் தேதி 18 வயது நிறைந்த வர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போது உள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6 லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7 லும், வாக்காளர் விவரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் திருத்தம். முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportel.eci.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புவ ர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப்படிவமான படிவம் 6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், 29.10.2024 பெயர்களை சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள். இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களிலும், தருமபுரி மேற்கு மாவட்டத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள், பேரூராட்சி மன்றத்தலைவர்கள், ஊராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்தாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள் (BLA2), பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்தப்பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி முக வர்கள் (BLA 2), பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்தப்பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத்தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், கவிநாடு கண்மாய் பகுதியில், பனை விதைகள் நடும் பணியினை, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் (25.09.2024) அன்று துவக்கி வைத்தார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## குத்தாலத்தில் முன்னாள் அமைச்சர்

# கோசி.மணி சிலைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

### அன்பில் மகேஷ்பொய்யாமொழி- சிவ.வீ.மெய்யநாதன்- நிவேதா எம்.முருகன்- குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

மயிலாடுதுறை,செப். 30-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றிய தி.மு.க. அலுலகத்தில் உள்ள கோ.சி.மணி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி சிலை அவரது 96 பிறந்த நாளான கடந்த 13ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இந்த கோ.சி.மணி சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சர், சிவ.வீ.மெய்யநாதன், பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி, மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம்,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, பொருளாளர் மகா. அலெக்சாண்டர்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, செல்லசேது.ரவிக்குமார், என்.இளையபருமாள், மலர்விழிதிருமாவளவன், ஞான.இமையநாதன், ப.முருகமணி, பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், பஞ்சுகுமார், ஏ.ஜி.ஜெ. பிரபாகரன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன்,பேரூர் கழகச் செயலாளர்கள் எம். சம்சுதீன், முத்துராஜா, எம். அன்புச்செழியன், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், சுபா, எஸ்.வெற்றிவேல், சங்கரநாராயணன்,

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் எம்.மகேந்திரன், ஜெயபிரகாஷ் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, குத்தாலம் க.அறிவுசெல்வன், செல்வராஜ், வி.எஸ்.என். செந்தில், இரா.முருகப்பா, சௌமியன், இரா.மனோகரன், எஸ்.ராஜ்குமார், ஆர். எஸ்.ஸ்ரீதர், காளி.தேசப்பன், கே.விக்னேஷ், பிரபாகரன், வைத்தியநாதன், தன்ராஜ், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதாமாரியப்பன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயாராஜேந்திரன், மாற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை பொன்.தருமராஜன்

### செப்டம்பர் 28 (1989)



கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தஞ்சை நகரத்தில் வட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து போட்டியிட்டவரிடம் பணியாற்றி வந்த இவர், தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு, கலைஞர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

தஞ்சை நாட்டு செக்கு தொழிலாளர் சங்க தலைவராகவும், மாவட்ட சினிமா ஆபரேட்டர்கள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**